# தென்மோடித் திலகம் திரு.எஸ். அந்தோனிப்பிள்ளை

**ஆடித்து முத்துக்கள் 96**

**- ஆர்.எல். சேவியர் -**

இளவாலை போயிட்டி என்னும் கிராமத்தில் 01.09.1926ம் ஆண்டு பிறந்த திரு. அந்தோனிப்பிள்ளை (திரவியம்) அவர்களின் தந்தையார் பெயர் அந்தோனிப்பிள்ளை சூசைமுத்து, தயார் பெயர் ஞானாதிக்கம் மரியம்மா. இவருடன் பிறந்தவர்கள் இருசகோதரிகள்.

இவரது பெரிய தந்தையாரும். மாமனாரும் கூத்துக் கலை அண்ணாவித்துவம் பெற்றவர்கள். பல கூத்துக்களைப் பயின்று அரங்கேற்றிப் புகழ்படைத்தவர்கள். தென்மோடி நாட்டுக்கூத்தில் புகழ்பெற்ற ராசாதம்பி இவரது மைத்துனர். திரு. அந்தோனிப்பிள்ளை அவர்களின் வாரிசுகளாக அவரது மருமகன் அண்ணாவியார் மனோகரன், மருமகன் அன்ரன் பீலிக்ஸ் ஆகியோர் இன்று வரை தமது பாரம்பரியக் கலையான நாட்டுக்கூத்தை வளர்த்து வருகின்றனர்.

திரு. அந்தோனிப்பிள்ளை அவர்கள் தனது ஆறாவது வயதில் யேசு பாலகனாக நடித்து கலையுலகில் பிரவேசித்துள்ளார். இதனைத் தொடர்ந்து தனது ஏழாவது வயதில் 'சந்தியோகுமையர்' நாட்டுக்கூத்தில் குட்டிச் சந்தி யோகுமையராகவும் யேசுபாலகனாகவும் வேடம்பூண்டார். தனது ஒன்பதாவது வயதில் திரும்பவும் சந்தியோகுமையர் கூத்தில் கன்னியாகவும், சேனாதிபதியாகவும் நடித்துள்ளார். தான் கல்வி கற்ற கல்லூரியில், தனது 13 ஆவது வயதில் 'றாச லோதினி' அல்லது 'மதியூசேகரன்' என்ற நாட்டுக்கூத்தில் மதியூ சேகரனாகப் பாத்திரமேற்றுள்ளார். தனது இருபத்திநாலாவது வயதில் ஒரு நாள் ஒத்தி கையுடன் 'கற்பலங்காரி' நாட்டுக் கூத்தில் முதலாவது கற்பலங்காரியாக வேடமேற்று பலரதும் பாராட்டைப் பெற்றவர்.

தொடர்ந்து 'சங்கிலியன்' கூத்தில் சங்கிலியனாகவும், 'விஜயமனோகரன்' கூத்தில் ஆஞ்சலோ பிரபுவாகவும் வேடமேற்று சிறப்பாக ஆடியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

தனது கல்வியை இளவாலை ஹொன்றியரசர் பாடசாலையில் ஆரம்பித்து கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் ஆசிரியர் பயிற்சியை முடித்து, களுத்துறை, முருங்கன், யாழ்ப்பாணம், வவுனியா, வல்வெட்டித்துறை முதலிய இடங்களில் ஆசிரியராகவும் அதிபராகவும் சேவை செய்து இளைப்பாறியவர். ஆசிரியராகப் பணிபுரிந்த காலத்தில் விடைகொடு தாயே. யார் குற்றவாளி, கவரி வீசிய காவலன், காதலா கடமையா போன்ற முப்பதுக்கும் மேற்பட்ட நாடகங்களை எழுதி நெறியாள்கை செய்துள்ளார். அந்தோனிப்பிள்ளை அவர்கள் நெறியாள்கை செய்த கூத்துகளில் சங்கிலியன், விஜய மனோகரன், கற்பலங்காரி, மரியதாசன் போன்றவற்றைக் குறிப்பிடலாம். முப்பதுக்கு மேற்பட்ட நாடகப் போட்டிகளில் கலாநிதி சிவத்தம்பி, கலையரசு சொர்ணலிங்கம், கலைப்புலவர் நவரத்தினம் முதலியவர்களுடன் நடுவராக பல தடவைகள் பணியாற்றியிருந்தார்.

இவர் ஆசிரியத் தொழில் செய்த இடங்களிலும் பாடசாலைகளிலும் நாடக, கூத்துக் கலைக்கு தன்னாலான பணிகளைப் புரிந்துள்ளார். களுத்துறை மாவட்டத்தில் மத்துகம, பேருவல பாடசாலைகளில் கற்பித்த காலங்களில் இஸ்லாமிய மாணவர்களுக்கு சமய போதனை ஆசிரியர் இல்லாத நிலையில் தானே திருக்குர்ஆனைக் கற்று, இஸ்லாமிய பாடத்தைக் கற்பித்தார். நளீம் ஹாயியார் என்ற பெருந்தகை இவரைப் பாராட்டி அவ்வேளை கௌரவமளித்திருந்தார். மன்னார் மாவட்டத்தில் முருங்கன் கிறீஸ்துராசா பாடசாலையில் கற்பித்த காலத்தில் பல நாடகங்களை எழுதி மேடையேற்றியிருந்தார். அவரது ஆசிரிய நண்பர் திரு. குழந்தை அவர்களுடன் மன்னார் மாதோட்டப் பாங்கு நாடகங்களில் நேரடியாகப் பங்குபற்றியுள்ளார். மட்டக்களப்பு ஆசிரிய நண்பர்களால் இருமோடி மரபுக் கூத்துக்களையும் நன்கு தெரிந்து வைத்திருந்தார். யாழ் மாவட்டத்தில் வல்வெட்டித்துறை, செம்பியன்பற்று, குடத்தனை, மணற்காடு, புலோலி மகாவித்தியாலயங்களில் கற்பித்த காலங்களில் கண்டுகொள்ளப்படாமல் இருந்த அந்த இடங்களை, நாடகங்களாலும் நாட்டுக்கூத்துகளாலும் வெளி உலகுக்கு கொண்டு வந்து மாணவர்களதும், ஊர் மக்களதும் பேராதரவையும் மதிப்பையும் பெற்றார்.



ஏப்பிரல் 02, 1977இல் திரு. அந்தோனிப்பிள்ளை அவர்களுக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற தினகரன் அண்ணாவியார் மாநாட்டில் 'தினகரன் கௌரவ விருது' வழங்கப்பட்டது. இவர் சங்கிலியன் நாட்டுக்கூத்தை நெறியாள்கை செய்து மேடையேற்றியபோது வண. றெஜி ராஜேஸ்வரன் அடிகளாரால் 'நவரசத் திலகம்' என்ற பட்டம் சூட்டி கௌரவிக்கப்பட்டார். கனடா – ஒன்ராறியோவில் மூன்று தடவைகள் 'குன்றில் எழுந்த குரல்' நாட்டுக்கூத்தை நெறியாள்கை செய்து மேடையேற்றினார். மே 6, 2000இல் குவிபெக் மொன்றியால் நகர் முத்தமிழ் மன்றத்தினரால் நடத்தப்பட்ட 'யாழ் அரசன்' நாட்டுக் கூத்துக்கு பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டு 'கூத்துக் கலைவேந்தன்' என்ற பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். 2001ல் ரொறன்ரோ தமிழ்க்கலை தொழில் நுட்பக் கல்லூரி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக இளங்கலைப் பட்டதாரி மாணவர்களுக்காக 'வேங்கைநாட்டு வேந்தன்' என்ற நாட்டுக்கூத்தை எழுதி மேடையேற்றி பலரதும் பாராட்டைப் பெற்றார்.

கூத்துக்கலை பற்றிய ஆய்வினை மேற்கொண்டிருந்த புகழ் பெற்ற கலை ஆசான் ஈழத்துப் பூராடனார் அவர்கள் திரு. அந்தோனிப்பிள்ளை அவர்களைச் சந்தித்து அவரைப் பற்றி அறிந்து 'கூத்துக்கலை திரவியம்' என்ற நூலை 2000ம் ஆண்டு ஆக்கியிருந்தார். அந்நூலில் அந்தோனிப்பிள்ளை அவர்களது கலைப்பயணம் பற்றியும் அவரெழுதிய முழுமையான இருநாட்டுக் கூத்துக்களும் பாடல்களோடு நாட்டுக் கூத்தினைத் தெரிந்த எவருமே பாடி நடிக்கக் கூடிய வகையில் சேர்த்துள்ளார். 2005ல் இவரது 'சுயசரிதையும் கூத்துக் கலையும்' என்ற நூல் ரொறன்ரோவில் வெளியிடப்பட்டது.

வாழும் போதே கலைஞர்கள் கௌரவிக்கப்பட வேண்டும் என்பதற்கமைய ரொறன்ரோவின் தனக்கென ஒரு தனித்துவமான கலைப் பாதையை அமைத்து கலைப்பணி ஆற்றிவரும் கணபதிரவீந்திரன், இளைப்பாறிய அதிபரும் தென்மோடி நாட்டுக் கூத்து அண்ணாவியாருமான திரு. அந்தோனிப்பிள்ளை அவர்களை தனது நாடகப் பெருவிழா மேடையில் கௌரவித்திருந்தார்.


உலகெங்கும் வாழும் தமிழர் மத்தியில் தனி இடத்தைப் பெற்றுள்ள 'காலம்' சஞ்சிகையிலும் பின்னர் 'தூறல்' சஞ்சிகையிலும் திரு. செல்வம் அவர்கள் கூத்தர் திரவியம் என்ற கட்டுரையை எழுதி திரு. அந்தோனிப்பிள்ளை அவர்களைச் சிறப்பித்திருந்தார்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக" என்பதற்கமைய 85வது அகவையில் கால்பதிக்கும் திரு. அந்தோனிப்பிள்ளை அவர்களை உலகெங்கும் உள்ள அவரது மாணவர்கள், ஆசிரிய நண்பர்கள், நாடக நாட்டுக்கூத்துக் கலைஞர்கள், குறிப்பாக கனடாவாழ் வல்வை மக்கள் - மாணவர்கள், கலை உலக உறவுகள், அவரை செல்வி கண்ட ஊடகத்துறையினர், குடும்பத்தார், உறவுகள் அனைவரும் மனம் நிறைந்த இறைஆசிகள் கூடிய வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கின்றனர்.

## எனது தொடர்பு:

கூத்துக் கலைத்திரவியம் என அழைக்கப்படும் திரு.எஸ். அந்தோனிப்பிள்ளை ஆசிரியரின் தொடர்பு எனக்கு 1954ம் ஆண்டில் ஏற்பட்டது அதாவது எமது தாயகத்தின் வடபகுதியின் சிறிய பட்டினமாகிய காங்கேசன் துறையில் இவர் தமது குடும்பத்தினருடன் வாழ்ந்த காலத்தில் புனித அந்தோனியார் ஆலய முன்றலில் ஒரு நாட்டுக்கூத்து மேடையேற்றப்பட்டது. அக்கூத்தை நெறியாள்கை செய்த அண்ணாவியார் திரவியம் மாஸ்ரர் அவர்களைக் கூத்தில் பிற்பாட்டுப் பாடி உதவுமாறு கேட்டுக் கொண்டார். கணீரென்ற குரலில் பாடும் குரல் வளமும் அனுபவமும் உள்ள ஆசிரியர் திரவியம் என்னையும் அழைத்துத் தம்முடன் பாடும்படி கேட்டார். ஆனால் கணீரென்ற குரலில் பாடும் ஆற்றல் என்னிடம் இருக்கவில்லை. கூத்து முடிந்ததும் வெற்றிகரமாக நடந்தேறிய கூத்தில் பிற்பாட்டுப் பாடிய திரவியம் மாஸ்டரின் கலையார்வத்தையும் குரல் வளத்தையும் வெகுவாகப் பலர் பாராட்டியது இன்றும் என் மனதில் பதிந்திருக்கிறது. இவர் காங்கேசன் துறையில் இருந்தபோது புகழ்பெற்ற நடிகர் V.V. வைரமுத்து அவர்களுடன் தொடர்பு வைத்திருந்தார். பிற்காலத்தில் இவர் ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் எமது தாயகத்தின் வட கிழக்குப் பகுதியிலல்லாது தென் இலங்கை மக்களின் பாராட்டைப் பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

இவரைப் போன்ற கலைப்பித்தர்கள் எமது நாட்டிலும் மற்றும் புலம் பெயர்ந்து வாழும் பற்பல நாடுகளிலும் சிறப்புற இயங்கினால் எமது பாரம்பரிய கலை வளர்க்கபட்டுப் பேணிப் பாதுகாக்கப்படும் எனத் திடமாக நம்பலாம்.



xavier.raphael@thaiveedu.com

## உங்களுக்குத் தெரிந்த கலைஞர்கள் பற்றி நீங்களும் எழுத வேண்டுமா?

**கலைஞர்கள் பற்றிய விபரங்கள், அவர்களுடைய புகைப்படங்களுடன்
உங்களுடைய பெயர், தொலைபேசி எண், புகைப்படம்
மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டுக்கு அனுப்பிவையுங்கள்.**

**Thaiveedu
Woodside Square, P.O.Box #63581
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0**

**Fax : 416.849.0594
E-mail : info@thaiveedu.com**